(அ) திருநெல்வேலி மாவட்டம், தட்டப்பாறை மைனர் சிறைச்சாலையைப் பார்வையிடும் குழுவில் அரசாங்கப் பற்றற்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரா ?

(இ) ஆமெனில், எத்தனை பேர் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) மூவர், மீண்டும் அங்கத்தினர்களாகவும் ஐவர் புதிதாக அங்கத்தினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. கே. கே. முத்தையா : தலைவர் அவர்களே, அந்தச் சிறைச்சாலையிலே கல்வி பயில்கின்ற மாணவர்கள் தொழில் நுட்பக் கல்வி பயில்கிறார்களா ? அல்லது கல்வி மாத்திரம் பயில்கிறார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வெறும் கல்விதான் அங்கு கற்றுத் தரப்படுகிறது.

New Revenue Division for Tiruchirappalli

*341 Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state —

(*a*) whether the Government have any proposal to form a new Revenue Division comprising of Perambalur and Thuraiyur taluks in Tiruchirappalli district ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெரம்பலூர் துறையூர் ஆகிய வட்டங்களைக்கொண்டு ஒரு புதிய வருவாய் கோட்டம் அமைப்பதற்கு கோரிக்கைகள் வரப்பெற்றன. அவற்றை மாவட்ட ஆட்சியர் பரிசீலித்து வருவாய் வாரியத்திற்கு ஓர் அறிக்கையை அனுப்பியுள்ளார். வருவாய் வாரியத்தின் பரிந்துரை எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. ஜே. எஸ். இராசு : அரியலூர் ரெவின்யூ டிவிஷனிலே சரிபாதி பெரம்பலூர் வட்டம் அடங்கியிருக்கிறது. ஏறத்தாழ 5 லட்சம் மக்கள் பெரம்பலூர் வட்டத்திலே வாழ்கிறார்கள். அரியலூரிலேயே ரெவின்யூ டிவிஷன் தலைமையிடம் இருப்பது மக்களுக்குச் சிரமமாக இருக்கிறது. ஆகவே, விரைவிலே அரசு இதைச் பரிசீலனை செய்து முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, வருவாய்த் துறை வாரியத்தின் பரிந்துரை வந்ததற்குப் பிறகு அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.